# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2286/27 - 2022 ජුනි මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.06.30

*2286/27 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

22 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான், இக்கட்டளையின் மூலம்,

(i) 2021, பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் (இதனகத்துப் பின்னர் “2021 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒழுங்குவிதிகள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டவணையின் பகுதி 1 இல் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து (அசையக்கூடிய, அசையாத, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் அடங்கலாக) தேறிய நிதியங்களாகவிருக்கின்ற, உடனடிக் குடும்ப உறுப்பினரொருவரிடமிருந்து புலம்பெயர்ந்த ஒருவர் மூலம் பண அன்பளிப்புக்களாகப் பெறப்பட்ட நிதியங்களிலிருந்து புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையின் கீழ் நிதியங்களை சொந்த நாட்டுக்கு அனுப்புவதை இடைநிறுத்துகின்றேன்.

(ii) இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது இக்கட்டளையின் திகதியளவில், 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் ஏற்கனவே புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையினைக் கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்களினால் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாய்க் கணக்குகளூடாக புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையின்கீழ் நிதியங்களைச் சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 10,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(iii) இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, 2021 இல் 3ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் முதற்தடவையாக புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையினைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் அனுமதிக்கப்பட்ட தொகையினை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.


1A - PG 5879 — 356 (2022/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(iv) இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின்போது, 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாய்க் கணக்குகள் அல்லது புலம்பெயர்ந்தவர்களின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகள் ஊடாக புலம்பெயர்ந்தவர்கள் மூலம் ஏதேனும் நடப்பு வருமானத்தினை அல்லது திரண்ட நடப்பு வருமானத்தினை (ஊழிய சேமலாப நிதியம், ஊழிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வூதியங்கள் அல்லது ஏதேனும் ஓய்வு நலன்கள் அடங்கலாக) சொந்த நாட்டிற்கு அனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(v) 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின்கீழ் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற அத்துடன் வேறொரு நாடொன்றில் தற்காலிக வதிவிட வீசாவைப் பெற்றுக்கொண்டுள்ள எவரேனும் தனிப்பட்ட இலங்கையருக்கான வெளிமுகப் பணவனுப்பல்களை அல்லது வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(vi) 2021 பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஒழுங்குவிதியின் அட்டவணையில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் வேறொரு நாட்டின் தற்காலிக வீசாவின் கீழ் இலங்கையிலிருந்து செல்வதற்கு உத்தேசிக்கின்ற இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆளுக்கான வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 10,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(vii) 2021 பெப்புருவரி 03 ஆம் திகதியிடப்பட்ட 2213/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதியின் (இதனகத்துப்பின்னர் 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டவணையில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக பின்வருவன நீங்கலாக, வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இடைநிறுத்துகின்றேன் :

(அ) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனொன்றிலிருந்து நிதியளிக்கப்படவுள்ள முதலீடுகள், அல்லது

(ஆ) சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு, இணங்கி முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடு மீது பிரயோகிக்கப்படக்கூடிய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தலினை நிறைவுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக முதலீடொன்று, அல்லது

(இ) முதலீட்டினைப் பெறுபவரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் நோக்கத்திற்காக, உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 15,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாடுகளில் கூட்டிணைக்கப்பட்ட/தாபிக்கப்பட்ட ஏற்கனவே தாபிக்கப்பட்ட துணை நிறுவனங்களில் அல்லது கிளை அலுவலகங்களில் தகைமையுடைய வதியும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படவுள்ள நிதியங்களின் மேலதிக முதலீடு/ மேலதிக உட்செலுத்தல் (ஏற்புடையவாறு), அல்லது

(ஈ) தகைமையுடைய வதியும் கம்பனிகளால் சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாட்டில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட தொடர்புபடுத்தல், சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்டம், பிரதிநிதி அல்லது வேறு ஏதேனும் அதனையொத்த அலுவலகங்களின் பராமரிப்பு நோக்கத்திற்காக உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரையான பணவனுப்பல்கள்,

ஆயின், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவர் அத்தகைய தேவைப்படுத்தலினை நிறைவு செய்தல் பற்றி திருப்தியடைய வேண்டும்.

(viii) 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பகுதி I இன் பந்தி 6 இன் கீழ் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் ஊழியர் பங்கு உரிமைத் திட்டம் அல்லது ஊழியர் பங்கு விருப்பத் திட்டத்திற்கு பங்களிக்கும் நோக்கத்திற்காக ஊழியர்கள் சார்பில் வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் துணை நிறுவனமாக அல்லது கிளை அலுவலகமாக இருக்கின்ற 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியினால் மேற்கொள்ளப்படுகின்ற வெளிமுக பணவனுப்பல்களை இடைநிறுத்துகின்றேன்.

(ix) இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, இலங்கையில் வதிகின்ற ஆளொருவரின் மூலம் வைத்திருக்கப்படுகின்ற வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது/அத்துடன் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(x) 2021 இன் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் பொதுவான அனுமதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்காக விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் சட்டத்தின் 7(10) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் அனுமதி வழங்குவதற்கு நாணயச் சபை அதிகாரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆயின்,

(அ) முன்மொழியப்பட்ட முதலீடானது சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் ஒன்றிலிருந்து நிதியளிக்கப்படுவதாக இருத்தல், அல்லது

(ஆ) முன்மொழியப்பட்ட முதலீடானது சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீடு மீது ஏற்புடைய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருத்தல்.

இக்கட்டளையானது, இக்கட்டளையின் திகதியிலிருந்து 6 மாத காலப் பகுதிக்கு செல்லுபடியானதாகும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு,
2021, யூன் 29.

EOG 6-0217

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.